Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 114 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | பெப்ரவரி 02, 2021
தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news



# வவுனியாவில் இராணுவத்தினருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் துப்பாக்கி சூடு!

வவுனியா – செட்டிக்குளம் வனப் பகுதியில் இராணுவத்திற்கும், ஆயுதங்களுடன் இருந்த குழுவொன்றுக்கும் இடையில் பரஸ்பர துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் ஆயுதங்களுடன் இருந்த மூவர், இராணுவத்தை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

03

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா - செட்டிகுளம் முசல்குத்தி காட்டுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் மீட்கப்பட்ட இளைஞர் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் நேற்று மாலை 5 மணியளவில் முசல்குத்தி காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்த நிலையில் அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர்

03

## முப்படை வசமுள்ள தனியார் காணிகள் ஒப்படைக்கப்படவேண்டும்

### யாழ்.ஒருங்கிணைப்புக் குழு கூடத்தில் தீர்மானம்!

முப்படையினர் வசமுள்ள தனியார் காணிகள் ஒப்படைக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண

03

## மன்னார், யாழ். மீனவர்கள் மூவரை காணவில்லை!

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத் தொடுவாய் கடற்பரப்பில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மதியம் கடற்தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் இன்று வரை கரை திரும்பவில்லை என இன்று செவ்வாய்க்கிழமை (2) நண்பகல் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் கொன்னையன் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.கொட்வின் (வயது-38) மற்றும் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஆர். கண்ணன் (வயது-55), எஸ். பாண்டியன் (வயது-23) ஆகிய மூன்று மீனவர்கள் இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிய வருகின்றது.

03

## அறிவியல் ஆதாரங்களுடன் ஐ.நாவில் பதிலளிப்போம் என்கிறது அரசாங்கம்!



“ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரின் போது, இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அறிவியல் ஆதாரங்களுடன் விரிவாகப் பதிலளிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.” - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும்

03

## கொரோனாவால் 32 வயது வைத்தியர் பலி



ராகம வைத்தியசாலையில் சேவையாற்றிய இளம் வைத்தியர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வைத்தியர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

32 வயதுடைய கயான் தந்தநாராயண எனும் வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த முதலாவது வைத்தியர் இவர் என தெரிவிக்கப்படுகின்றது.

## மியன்மாரைப் போன்று இலங்கையிலும் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறலாம்



மியன்மாரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்ற ஆங் சான் சூகி அம்மையார் நாடாளுமன்றின் முதலாவது அமர்வைக் கூட்டவிருந்த நாளில் அந்நாட்டின் இராணுவம் பலவந்தமாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது.

03



## “பொத்துவில் முதல் பொலிகண்டி வரை” போராட்டத்துக்கு முஸ்லிம்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

“பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்லிம்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன்

03



# கொரோனா தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒரு தடையாக அமையாது

கொரோனா தாக்கம் இனி கல்வித் துறைக்கு ஒரு தடையாக அமையாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று(செவ்வாய்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'சிறந்த திட்டமிடலுக்கு அமைய முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங் களின் கற்றல் நடவடிக்கைகள் வழமை நிலைக்கு திரும்பியுள்ளது.

மேல்மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் அனைத்து தரங்களுக்குமான கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்க முடியும் என பிரதேச தொடர்பு குழுவினர் யோசனை முன்வைத்துள்ளார்கள்.

களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டம் குறித்து பிரதேச தொடர்பு



குழுவினர் முன்வைத்துள்ள யோசனைகளை சுகாதார பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளோம்.

பாடசாலைகளை எதிர்வரும் 15ஆம் திகதி திறக்க சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பாளர் அனுமதி வழங்குவார் என எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்களுக்கும், பாடசாலை வெளிக்கள சேவையாளர்களுக்கும் கொரோனா தடுப்பூசியை வழங்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்கவிடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இம்மாதத்தின் நடுப்பகுதியில் பாட சாலை சேவையாளர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் தடுப்பூசிகளை வழங்க எதிர் பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் கல்வித்துறைக்கு ஏற்படுத்திய சவால்களை சிறந்த முறையில் வெற்றிக் கொண்டுள்ளோம்.

கொரோனா தாக்கம் இனி கல்வித் துறைக்கு ஒரு தடையாக அமையாது. அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் ஆசிரிய சங்கம், சிவில் அமைப்புக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டப்படி 2020ஆம் ஆண்டுக் கான கல்விப் பொதுதராதரசாதரண தர பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்படும். இடம்பெற்று முடிந்த உயர்தர பரீட்சைக்கான பெறுபேறு ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் வெளி யிடப்படும்.

சாதாரண தர பரீட்சைக்கான பெறு பேற்றை ஜூன் மாதம் வெளியிட திட்ட மிடப்பட்டுள்ளது." எனக் குறிப்பிட் டுள்ளார்.

## சென்னையில் மூன்று இலங்கையர்கள் கைது!

பாதாள உலக குழு தலைவர்களில் ஒருவரான கிம்புலா எலே குணாவும் அவரது மகனும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அத்துடன், மேலும் ஒரு பாதாள குழு உறுப்பினரான பும்பா என்ற சந்தேக நபரும் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

குறித்த மூவரும் சென்னையில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள் ளார்.

இதேவேளை, கைது செய்யப் பட்டுள்ள குறித்த மூவரும் இரகசிய இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 97 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 8,088 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்!

முப்படையினரால் நிர்வகிக்கப் படும் 97 தனிமைப்படுத்தல் நிலை யங்களில் 8 ஆயிரத்து 88 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

இன்று(செவ்வாய்கிழமை) காலை 06 மணிவரையான 24 மணித்தி யாலங்களில் 916 பேர் குணமடைந்து வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் இருந்து வெளியேறி யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள 6 ஆயி ரத்து 585 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

## ஆஸி. பெர்த் நகரில் பரவும் காட்டுத் தீ



அவுஸ்ரேலியாவின் பெர்த் நகரில் பரவி வரும் காட்டுத் தீயினால், முப்பத்துக்கும் மேற் பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

மேற்கு பகுதியில் உள்ள மலைத் தொடரில் சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு காட்டுத்தீ கொளுந்து விட்டு எரிந்து வரும் நிலையில், அதனை கட்டுப்படுத்த 200க்கும் மேற்பட்ட தீயணைப்புத்துறை வீரர்கள் போராடி வருகின்றனர்.

சுவான் நகரம் மற்றும் முன் டரிங், சிட்டரிங், நார்தாம் ஆகிய பகுதிகளிலும் காட்டுத்தீ ஏற்பட் டுள்ளது. சுமார் 7 ஆயிரம் ஹெக்டர் காட்டுப்பகுதி தீக்கிரையாகி யுள்ளதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

அத்துடன், காட்டுத்தீ பரவும் பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

## 60 ஆயிரம் பேருக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

இலங்கையில் சுகாதார பிரிவினர், முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 60,000 பேருக்கு இதுவரை அஸ்ட்ரா ஜெனகா (யுளவசயணுநநெஉய) தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக கொவிட் - 19 கட்டுப்பாட்டு மற்றும் ஆரம்ப வைத்திய சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தடுப்பூசி பெற்றுக் கொண்ட எவருக்கும் குறிப்பிடத்தக்களவு ஒவ்வாமை ஏற்படவில்லை என இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷ னி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா தடுப்பூசி பகிர்ந் தளிக்கப்படும் முறைமையின் கீழ் நாட்டின் சனத்தொகையில் 65 வீதமானோருக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நுண்நிதி இலகுகடன் வழங்கும் வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

வடக்கு மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணங்களில் வாழும் கடன்பிடியில் சிக்கியுள்ள மக்களுக்கான நுண்நிதி இலகுகடன் வழங்கும் வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நிதி அமைச் சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்வேறு நுண் நிதிக் கடன் முறைகள் மூலம் கடன்களைப் பெற்று கடன்பிடியில் சிக்கியுள்ள குறைந்த வருமானம் கொண்ட கிராமிய மக்களை குறித்த கடன் பொறி யிலிருந்து விடுவிப்பதற்காக கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் மூலம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ள குறைந்த வட்டி வீதத்துடன் கூடிய இலகு கடன் வழங்கல் திட்டம் வடமாகாணம் மற்றும் வடமத்திய மாகா ணங்களின் 06 மாவட்டச் செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது வடமாகாணத்திற்காக 292 மில்லியன்களும் வடமத்திய மாகாணத் திற்காக 250 மில்லியன்களும் அடங்கலாக மொத்தம் 542 மில்லியன்கள் குறித்த கடனுதவி திட்டத்தின் மூலம் பயனாளி களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த நிதி சுழற்சி முறை நிதியாகவும் பயன்படுகின்றது.

கடன் பிடியில் சிக்கியுள்ள மக்களுக்கு சலுகை வழங்குவதற்காக குறித்த சுழற்சி முறை நிதியைப் பயன்படுத்தி கடனுதவி திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அதன்கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் அதிகபட்ச கடன் தொகையை 100,00 ரூபாய் வரைக்கும் அதிகரிப்பதற்கும் குறித்த கடன்களுக்கான வருடாந்த வட்டி வீதத்தை 9 வீதத்திலிருந்து 6வீதம் வரை குறைப்பதற்கும் பிரதமரினால் யோசனை முன்வைக்கப்பட் நிலையில், அதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தடுப்பூசிகளை வழங்க பிரித்தானியா நிபந்தனை!

தங்கள் நாட்டு கொரோனா தடுப்பூசி திட்டம் பாதிக்கப்படாமல் இருந்தால்தான் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அந்தத் தடுப்பூசிகளை வழங்க முடியும் என பிரித்தானியா நிபந்தனை விதித்துள்ளது.

இதுகுறித்து பிரித்தானியாவின் சர்வதேச வர்த்தகத் துறை அமைச்சர் எலிசபெத் ட்ரஸ் கூறுகையில், 'பிற நாடு களுக்கு ஏற்றுமதி செய்வதற்காக 36 கோடி தடுப்பூசிகளை தயாரிப்பு நிறுவனங்களிடம் பிரித்தானியா அரசாங்கம் கேட்டுள்ளது. அந்தத் தடுப்பூசிகளை ஐரோப்பிய ஒன் றியம் நாடுகளுக்கு அனுப்புவதால், தற் போது பிரித்தானியாவில் செயற்படுத் தப்பட்டுவரும் கொரோனா தடுப்பூசி திட் டத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது.

ஏற்கெனவே நிர்ணயித்த வகையில் கொரோனா தடுப்பூசி திட்டம் செயற்படுத் தப்பட்டால்தான் அந்தத் தடுப்பூசிகளை ஐரோப்பிய ஒன்றியம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். கொரோனா தடுப்பூசி விநியோகத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணைந்து செயற்படுவோம் என்று தடுப்பூசித் துறை நதீம் ஸஹாவி கூறியது உண்மைதான். இருந்தாலும், அதற்கு முன்னர் பிரித்தானியா மக்கள் அனைவருக்கும் அந்தத் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்துகொள்ள வேண் டியது அவசியம்.

பெப்ரவரி மாத இறுதிக்குள், கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு அபாயம் அதிகம் நிறைந்த பெரும்பாலானவர்களுக்கு தடுப்பூசி போட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளோம். நிறுவனங்களிட மிருந்து தடுப்பூசிகளை உரிய நேரத்தில் பெறுவதில் இப்போதே பிரச்னைகள் இருந்து வருகின்றன.

பிற நாடுகளுக்கு நாங்கள் எவ்வளவு கொரோனா தடுப்பூசி வழங்குவோம் என் பதை இப்போதே கூற முடியாது. இருந்தா லும், அந்தத் தடுப்பூசிகளை விநியோகிப்ப தில் அண்டை நாடுகளுடனும் பிற வளரும் நாடுகளுடனும் நிச்சயம் இணைந்து செயற்படுவோம்.

பிரித்தானியாவில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் திட்டமிட்டபடி தொடர்ந்து நடப்பதற்கு பாதிப்பு ஏற்படாவிட்டால், அந்தத் திட்டம் முடிவதற்கு முன்னரே பிற நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசி அனுப்புவோம்' என கூறினார்.

# வேலை கிடைத்த சந்தோஷத்தில் 'பார்ட்டி' போட்ட இளைஞர்கள் நீரில் மூழ்கிச் சாவு!

களனி கங்கையில் நீராடச் சென்ற இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நவகமுவ, மாபிடிகம பாலத்திற்கு அருகில் நேற்று (01) மாலை நீராடச்சென்ற போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இருவரின் சடலத்தை இன்று காலை கடற்படையினர் மீட்டிருந்தனர்.

உயிரிழந்த இளைஞன் ஒருவன் நேற்று தொழில் நிறுவனம் ஒன்றில் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டு அதில் தெரிவான சந்தோசத்தில் களனி கங்கையின் மாபிட்டிகம பாலத்திற்கு அருகில் மது விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

மது அருந்திவிட்டு நீராட சென்ற போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இருவரும் நீரில் மூழ்கிய சந்தர்ப்பத்தில் ஏனைய நண்பர்கள் இருவரும் கரையில் தூங்கிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கபடுகின்றது. சம்பவத்தில் 27, மற்றும் 19 வயதுடைய வர்களே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அறிவியல்...

வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான 30/1 தீர்மானம் குறித்த அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

முந்தைய நிர்வாகம் இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நிலையில் தற்போது இலங்கை பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கப்பட்ட போதிலும், இந்த நிபந்தனைகளுக்கு இணங்க இலங்கையின் அரசமைப்பில் ஏற்பாடுகள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் இலங்கை தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமை தாங்குவார்.

இந்த அமர்வு ஒரு மெய்நிகர் உச்சி மாநாடாக இருக்கக்கூடும். எனவே, சரியான நேரத்தில் போதுமான பிரதிநிதித்துவம் செய்யப்படும்" - என்றார்.

## மியன்மாரை...

ஐக்கியநாடுகள் சபை தொடங்கி உலக நாடுகள் பலவும் கண்டித்துள்ள இந்த ஜனநாயகப் படுகொலையை இலங்கை மக்கள் தங்களுக்கான ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். விழித்துக்கொள்ளாவிடில் மியன்மாரைப் போன்று இலங்கையிலும் விரைவில் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறலாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மியன்மாரில் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறியுள்ளமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

பௌத்தம் பெரும்பான்மையாக உள்ள மியன்மாரில் இராணுவத்தால் சிறுபான்மையினராகிய ரோஹிங்கியா முஸ்லீம்கள் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்த இனவழிப்புத் தொடர்பான விசாரணைகளை அந்நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஏற்பாட்டில் மியன்மார் சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆங் சான் சூகி அம்மையாரின் வெற்றி இந்தப் புலனாய்வுப் பொறிமுறைக்கு இடங்கொடுக்கும் என்று அஞ்சியே நாடாளுமன்றத் தேர்தலில் தனது ஆதரவுடன் போட்டியிட்ட கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ள நிலையில், இராணுவம் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தாங்கள் நிகழ்த்திய தமிழின அழிப்புக்கு எதிரான கத்தி தங்கள் தலைக்கு மேல் எந்நேரமும் தொங்கிக்கொண்டிருப்பதை ராஜபக்ஷ சகோதரர்கள் நன்கு அறிவார்கள். இதனாலேயே, மீளவும் ஆட்சி பீடம் ஏறியதும் முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியிருந்த ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்படுத்தல் தீர்மானத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். இப்போது, மனித உரிமைகள் பேரவை ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் கூடவிருக்கும் நிலையில் பேரவையின் ஆணையாளர் இவ்விவகாரம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படல் வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதுடன் குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து அதற்கான தண்டனைகள் குறித்தும் பேசி வருகின்றார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதி ஆனவுடன் சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தி வருகின்றார். தனது முன்னாள் இராணுவ சகாக்களை சிவில் நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளாக நியமித்து வருகிறார். இனப்படுகொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சர்வதேசரீதியாகப் பலம்பெற்று வரும் நிலையில், அதிலிருந்து தப்புவதற்காக, எதனையுமே இராணுவ ரீதியான மனோநிலையுடன் அணுகும் ஜனாதிபதி முற்றுமுழுதான இராணுவ ஆட்சிக்குள் பிரவேசிக்க மாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. நடைபெற்றது தமிழினப் படுகொலையாயினும் அதன் பொருட்டு இலங்கையில் இராணுவம் மேலாதிக்கம் பெறுவது சிங்கள தேசத்துக்கும் உகந்தது இல்லை என்பதைச் சிங்கள மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## முப்படை...

ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன்ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் முப்படையினர் பொலிஸார் வசமுள்ள காணிகள் தனியாருடையது அதற்கு சொந்தமான மக்கள் வேறு இடங்களில் வாடகைகளில் குடியமர்ந்துள்ளார்கள். இராணுவத்தின் வசமுள்ள மக்கள் பயன்படுத்தாத நிலையில் இராணுவத்தினர்தேட்டச் செய்கையிலும் வேறு தேவைகளுக்குமாக பயன்படுத்து கின்றனர் மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் அவற்றை வழங்குவதன் மூலம் தான் மக்கள் அதிலிருந்து பயன்பெற்று முன்னேறுவார்கள் எனவே இக்காணிகளை மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தினர்.

குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யுத்தம் நடைபெற்றபோது சரத்பொன்சேகா யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தபோது விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் மேற்கொள்வதற்காகவே இப்பகுதி உயர் பாதுகாப்பு வலையமாக என்றதாகவும் அது இல்லை என்றால் காணிகள் விடுவிக்கப்படும் என அன்று கூறியிருந்தார். யுத்தம் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படாதுள்ளது. எனவே இக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

அங்கஜன் இராமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்

மக்களின் காணிகள் மக்களுக்க வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை ஆனால் தீர்மானத்தை அனுப்புகின்றபோது முழுமையான விபரங்களுடன் சேர்த்து அனுப்புவதன்மூலம் அக் காணிகளை விடுவிப்பது இலகுவாக இருக்கும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

காணிகள் விடுவிடுவிக்கப்படவேண்டும் என்பது அனைவரின் கோரிக்கையாக இருக்கின்றது அவ்வாறான நிலையில் இராணுவத்தினரின் தேவைக்காக காணிகள் அளவீடு செய்யப்பட்ட நிலைமையும் உள்ளது அதேபோல வேறு பல காணிகள் அளவீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது எதிர்ப்புக்களினால் கைவிடப்பட்ட நிலையும் காணப்படுகின்றது ஆகவே அவற்றையும் உள் இணைத்ததாக தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றார் இதனையடுத்து குறித்த விபரங்களுடன் தீர்மானம் அனுப்புவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்திற்கான முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று இடம் பெற்றது. இதில் துறைசார்ந்த விடையங்கள் பல்வேறு ரீதியாக கலந்துரையாடப்பட்டது. இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , செல்வராசா கஜேந்திரன், எம்.ஏ.சுமந்திரன் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி. கே.சிவஞானம், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களம் சார் பிரதிநிதிகள், பொலிஸ் இராணுவ உயர் அதிகாரிகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் ஓலைத்தொடுவாய் கடற்கரையில் இருந்து குறித்த 3 மீனவர்களும் தூண்டில் மூலம் மீன் பிடிக்க படகு ஒன்றில் தொழிலுக்குச் சென்ற நிலையில் இன்று வரை கரை திரும்பவில்லை என தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த மீனவர்களின் உறவினர்கள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (2) மன்னார் பொலிஸ், மாவட்ட அரசாங்க அதிபர், கடற்தொழில் திணைக்களம் மற்றும் கடற்படை ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் கடற்படையினர் கடலில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது வரை மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

## துப்பாக்கிச் சூட்டில்...

மீட்கப்பட்டு செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜெறின் (வயது 36) என்ற நபரே படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கி சூட்டை மேற்கொண்டவர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளிவரவில்லை.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## வவுனியாவில்...

வில்பத்து வனப் பகுதியில் கடமைகளுக்காக சென்ற இராணுவத்தின் மீதே இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த 20 வயதான செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பத்தில் துப்பாக்கி பிரயோகம் நடத்திய ஏனையோர் தப்பிச் சென்றுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## பொத்துவில்...

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, தமிழ் கட்சிகளின் நடைபவனி ஆர்ப்பாட்டத்துக்கே பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு முஸ்லிம்களிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான அடக்கு முறைகளை எதிர்த்தும், கண்டித்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டம், நாளை (03) தொடங்கி, ஆறாம் திகதி வரை நடைபெற உள்ளது. நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், தொல்பொருள் என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பூர்வீக வாழிடங்களை ஏப்பமிடல், பேரினவாத அழுத்தங்களுக்கு அடிபணியும் அரசின் போக்குகள், ஜனாஸா எரிப்பு என்பவற்றைக் கண்டித்தே இந்த கண்டன நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"சிறுபான்மையினர் என்ற வகையில், முஸ்லிம் சமூகமும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. எனவே, எமது சகோதர சமூகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நடைபவனிக்கு, முஸ்லிம் சமூகமும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கிறது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா உயிரிழப்பு 323 ஆக அதிகரித்துள்ளது

நாட்டில் கொரோனா வைரஸால் மேலும் ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 323 ஆக அதிகரித்துள்ளது.

வத்தளை பகுதியை சேர்ந்த 75 வயதான பெண் ஒருவர் கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் கடந்த 31ஆம் திகதி மரணித்தார்.

கொவிட்-19 நிமோனியாவுடன் மோசமடைந்த சிறுநீரக நோய் மற்றும் குருதி நஞ்சாதலால் ஏற்பட்ட அதிர்ச்சி நிலையே மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நுகேகொடை பகுதியைச் சேர்ந்த 69 வயதான ஆண் ஒருவர் கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொவிட்-19 நிமோனியா மற்றும் புற்று நோய் நிலைமையே மரணத்திற்கான காரணம் என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு 02 பகுதியை சேர்ந்த 72 வயதான ஆண் கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் நேற்று முன்தினம் மரணித்தார்.

கொவிட்-19 நிமோனியாவுடன் மோசமடைந்த நுரையீரல் தொற்று மற்றும் இதய நோய் நிலைமையே மரணத்துக்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுகம்பொல பகுதியைச் சேர்ந்த 69 வயதான ஆண் ஒருவர் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது நேற்று மரணித்தார்.

கொவிட்-19 தொற்றுடன் ஏற்பட்ட இதய நோய் நிலைமையே மரணித்திற்கான காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் பொலன்னறுவை பகுதியை சேர்ந்த 39 வயதான ஆண்ணொருவர் கடந்த 30 ஆம் திகதி வீட்டில் உயிரிழந்தார்.

கொவிட்-19 தொற்றுடன் குருதி நஞ்சாதலால் பல உறுப்புக்கள் செயலிழந்தமை, சுவாச அழற்சி நிமோனியா மற்றும் சிறுநீரக தொற்று நிலைமையே அவரது மரணித்திற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.


மடவல பகுதியை சேர்ந்த 73 வயதுடைய பெண்ணொருவர் தெல்தெனிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மரணித்துள்ளார்.

கொவிட்-19 நிமோனியாவுடன் இதயம் செயலிழந்தமையே அவரது மரணத்திற்கான காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே கெலிஓயா பகுதியை சேர்ந்த 77 வயதான ஆண் ஒருவ்ர கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் நேற்று மரணித்தார்.

கொவிட-19 நிமோனியா, குருதி நஞ்சாதல், மோசமடைந்த நீரழிவு மற்றும் சிறுநீரக நோய் நிலைமை காரணமாக அவர் மரணித்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகளவில் கொவிட்-19 தொற்றிலிருந்து ஏழரை கோடிக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர்!



உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றிலிருந்து ஏழரை கோடிக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களின் படி, உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து ஏழு கோடியே 51இலட்சத்து 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றினால் 10 கோடியே 35இலட்சத்து 24ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கொடிய கொரோனா வைரஸ் பெருந் தொற்றினால், இதுவரை 22இலட்சத்து 37ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

இதற்கு அடுத்தப்படியாக அதிக பாதிப்பினை எதிர்கொண்ட நாடுகளாக இந்தியா, பிரேஸில், ரஷ்யா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் உள்ளன.

# 70 ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 826 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 64 ஆயிரத்து 983ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 58ஆயிரத்து 75 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். இந்த நிலையில், தொற்றுக்கு உள்ளான ஆறாயிரத்து 585 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 323 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பதவிக்காலம் நிறைவடைந்து நாட்டிலிருந்து வெளியேறும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஃபெம் தி பிக் என்கொக், ஆலோசனை மற்றும் தூதுவர் காரியாலயத்தின் பிரதி தலைவர் ட்ரான் ட்ரொங் தன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு இன்று (02) முற்பகல் விஜேராமவிலுள்ள கௌரவ பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுபான சாலைகளுக்கு பூட்டு

சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை மதுவரித்திணைக்களம் இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 04 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என அத்திணைக்களம் அறிவித்துள்ளது




# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி உணவு தவிர்ப்புப் போராட்டம்





வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி சுழற்சி முறையிலான உணவுதவிர்ப்பு போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இன்று ஆரம்பமாகியுள்ளது.

சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டித்து, வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் இந்த போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று தொடக்கம் 6 ஆம் திகதி வரை இந்த போராட்டம் அமைதியான சுழற்சிமுறையில் இடம்பெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் மதகுருக்கள், பொதுமக்கள், சிவில்சமூக அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், என அனைவரும் கலந்து கொண்டு தமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து நாளை 3 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள, பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான நடைபயணத்துக்கும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.